மருதமடுத்
தர்க்கப் பிரசங்கம் 8.

# THE FALLACY OF COMMUNISM

# சமதர்மத்தின் தப்பறை.

BY

REV. FR. S. GNANAPRAKASAR, O. M. I.

PUBLISHED BY
THE JAFFNA DIOCESAN LITERATURE
COMMITTEE
1938.

உ
அன்பளிப்பு
செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்
"பாலாவி"
மருதனார்மடம்
இணுவில்

# THE FALLACY OF COMMUNISM

# சமதர்மத்தின் தப்பறை

*Nihil obstat* :
S. Asirvatham, O. M. I.
Colombogam,
21-6-32.

*Imprimatur:*
F. M. BIZIEN, O. M I.
Vic. Gen.
22-6-32

*Re-Imprimatur* :
J. EMILIANUS PILLAI, O. M. I.,
Vic. Gen.
Jaffna, 10-5-38.

மருதமடுத்
தர்க்கப் பிரசங்கம் 8.

# THE FALLACY OF COMMUNISM

# சமதர்மத்தின் தப்பறை

---

சீஷன் :—எத்திசையிலும் சத்தியத்தைப் போதித்து வரும் உத்தம குருவே, நமஸ்காரம்! இன்று நான் தேவரீரிடம் ஒரு புதுக் கேள்வியைக் கேட்க உத்தரவு தரவேணும். இந்தத் திருப்பதியிலே வந்திருக்கிற சகலரும் அறியவேண்டிய சில காரியங்களைப்பற்றி ஒன்று கேட்கவேண்டி இருக்கிறது. தங்களுக்குச் சித்தமானால் அதை விநயமாக எடுத்துச் சொல்லுவேன்.

குரு :—வீண் தர்க்கமில்லாமல் ஏதாவது ஒரு உண்மையை அறிந்துகொள்ள வருகிறவர்களுடைய சந்தேகங்களை ஆராய்வாகக்கேட்டு, அப்படிப்பட்ட கேள்விகளுக்கு, தேவ கிருபையால், நல்ல மறுமொழி சொல்ல எப்போதும் ஆயத்தம். சத்தியவேத குருமார் உண்மையைப் போதிக்கிறதற்கு என்றுதான் அல்லவோ இருக்கிறவர்கள்!

சீஷன் :—இந்த நாட்களிலே சமதர்மம் அல்லது பொதுவுடைமைக்கட்சி என்று ஒரு பேச்சு அங்கங்கே கேட்கப்படுகிறது. சமதர்மக்காரர் என்றால், எல்லாத்தையும் ஒரு சமம் ஆக்குகிறவர்களாம். இனி உலகத்திலே பணக்காரர், பிச்சைக்காரர் என்ற வித்தியாசம் இராதாம். மேல் கீழ் என்ற பேதம் காணப்படாதாம்.

படித்தவர்கள் படியாதவர்கள், உத்தியோகத்தர்கள் கூலிக்காரர், எல்லாரும் ஒரு மட்டத்திற்கு வந்துவிடுவார்களாம். இனி, தொண்டமானுமில்லை, தோட்டியுமில்லையாம். எல்லாருக்கும் காணி பூமிகள், பணம் பண்டங்கள் சரிசமனாக இருக்குமாம். ஒருவருக்கும் தனி உடைமை வேண்டாமாம்; பொதுவுடைமையே போதுமாம். சுருக்கத்திலே சொல்லிவிடுகிறது என்றால் உலகத்திலே கயிலாயம் வரப்போகிறதாம். இதை மூடச் சனங்கள் அங்கங்கே திறந்தவாயோடே கேட்டுப் பொச்சடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனாலும், இந்தப் புதுப் போதனையைப் பார்த்தால், இதில் ஏதோ வஞ்சகம் இருக்கிறதுபோல் தோன்றுகிறது. இது காஞ்சிரைக் காய்போலப் பார்வைக்கு அழகாயிருக்கிறது; தின்றால் படு நஞ்சு. இந்தச் சமதர்மக் கொள்கையைப் பற்றித் தான் சுவாமியாரிடம் கேட்க வந்தேன். இதினுடைய சுயதன்மையை நாங்கள் எல்லாரும் சரியாய் அறிந்து கொள்ளப் பண்ணிவிடுவீர்களானால் இனிமேலில்லை என்ற பெரிய நன்மையாய் இருக்கும்.

குரு:—சமதர்மம் அல்லது பொதுவுடைமைக் கொள்கை என்றது புதிதல்ல; வெகுநாட்பட்ட பழஞ் சரக்கு. உலகத்திலே, அங்கங்கே, பல காலங்களிலே, பலர் வறுமை முதலிய இடைஞ்சல்களினால் திருத்தியீனப்பட்டவர்களைக் கிள்ளிக் கிளப்பிவிட்டு, உள்ளவர்களிடத்திலே கொள்ளையடிப்பித்திருக்கிறார்கள். இக்காலத்துச் சமதர்மக் கிளர்ச்சியும் ஒரு பெரும் பகற் கொள்ளை தான். எவருக்குந் தனியுடைமை ஆகாது என்று சொல்லி, ஒருவன் பாடுபட்டுத் தேடி, அல்லது பெற்றாரால் உரிமையாகப் பெற்று வைத்திருக்கிற பொருளை, பண்டத்தை, காணியை அப்பிக்கொண்டு, பொதுவுடைமைக் கணக்கிலேவைப்பது நீதியா? இல்லாதவர்கள் நல்ல முயற்சிபண்ணி உழைத்து, அல்லது, வேண்டுமானால், உள்ளவர்களிடத்தில் பிச்சை வாங்கிச்

சிவிப்பதல்லவோ நீதி! அப்படி இல்லாமல், வைத்தி ருக்கிறவனிடத்தில் தட்டிக்கொட்டி அவனையும் தன் மட்டம் ஆக்கிவிடுவது சரிப்படுமா? அல்லாமலும், சகலத்தையும் சமம் ஆக்குகிறோம் என்றது பதர்ப் பேச்சு. கடவுள் உலகத்தைச் சமமாக உண்டாக்க வில்லை. ஆகாயத்திலே, வெள்ளிக்கு வெள்ளி வேற்றுமை. இரண்டு வெள்ளி ஒரு கணக்காய் இல்லை. வெள்ளிக் கூட்டங்களுக்கு ஒவ்வொரு, பெரிய, நடுவெள்ளி உண்டு. பூமி முதலான கிரகங்களுக்கு நடுநாயகமாகச் சூரியன் விளங்குகிறது. பூமியிலும், சிறிதான கோளங்கள் பூமி யைச் சுற்றிவருகின்றன. பூமியிலே, எங்கெங்கும் தண்ணீர் அல்ல; எல்லாம் நிலம் அல்ல. சமுத்திரம் வேறு, கட்டாந்தரை வேறு. நிலத்திலே, எல்லாம் மரம் அல்ல, எல்லாம் மிருகமல்ல. மரமும், எல்லாம் ஒரு மரம் அல்ல. மிருகமும், எல்லாம் ஒரு மிருகம் அல்ல. இரண்டு மரம் ஒரு உயரம் பருமமாய் இல்லை. ஒரு மரத்திலேயும், இரண்டு இலை ஒரு விதமாய் இல்லை. மிருகங்கள் எல்லாம் ஒரு மாதிரி அல்ல; சிறிதும் பெரி துமாய் உண்டு. ஒரு மிருகத்துக்கு ஒரு மிருகம் தீன்; அல்லது, புல்லு முதலான கீழுயிர்கள் தீன். கடலிலே, பெரிய மச்சங்களுக்குச் சின்ன மச்சங்கள் உணவு, மனிதர்களுக்குள்ளேயும், ஒரு குடும்பத்திலே, எல்லா ரும் ஒரு மாதிரி அல்ல. தகப்பன் வேறு; தாய் வேறு, பிள்ளைகளுக்குள்ளும் மூத்த பிள்ளை, இளைய பிள்ளை; புத்தி கூடின பிள்ளை, புத்தி குறைந்த பிள்ளை; சவி யுள்ள பிள்ளை, நராங்கின பிள்ளை. பால் குடிக் குழந் தையும் தாய் தகப்பனும் சமனாய் இருக்க முடியாது. ஆண் சகோதரமும் பெண் சகோதரமும் ஒருமாதிரி அல்ல. இப்படியே பெரிய குடும்பம் ஆகிய சனசமூகத் திலேயும் எல்லாரும் அரசர் அல்ல; எல்லாரும் மந்திரி அல்ல; எல்லாரும் உத்தியோகத்தர்கள் அல்ல; எல்லாரும் குடியானவர்கள் அல்ல, மனுஷருக்குள்ளே, எல்லாரும் ஒருவகையான புத்தி சாலிகள் அல்ல;

கெட்டிக்காரர் அல்ல; சரீரப் பெலம் உள்ளவர்கள் அல்ல. புத்திமான், படிப்பால் மேற்படுவான்; உத்தியோகம் பெறுவான்; பண்டிதனுவான். கெட்டிக்காரன், விவேகமாய் உழைத்துப் பணக்காரனுய் வருவான். பெலன் உள்ளவன், பல வேலேயும் செய்து நல்லாய் இருப்பான். "உலகம் பலவிதம்" என்று ஒரு சுலோகம் உண்டாயிருக்கிறது அல்லவா? பல விதமாய் இராவிட்டால் உலகம் என்று ஒன்று இராது. ஆதிதொட்டே உலகத்தில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசம் இருந்திருக்கிறது; உலகம் முடியுமட்டும் இருக்கும். இதை அழிக்கப்போகிறேம் என்று சத்தம் இடுகிற சமதர்மக்காரர் "வானலோகத்துக்குப் போய்ப் பாரிசாதமலர் கொண்டுவருகிறேன்" என்றவனைப் போலவே வீண்கதை பேசுகிறார்கள். இவர்கள் பொதுவுடைமை, சமதர்மம் என்று சொல்லுகிறது என்ன? உள்ளவர்கள் எல்லாரையும் இல்லாதவர்கள் ஆக்கிப்போட்டு, முதலாளிமாராய் இருப்பவர்கள் சகலத்தையும் அனுபவிக்கிறதுதான். சமதர்மம் சரியாய்ப் போதிக்கப்பட்டது ருஷியாவிலே அல்லவா? அங்கே நடந்திருக்கிறது என்ன? இலட்சக்கணக்கான நாட்டவர்கள் பிச்சைக்காரராய்ப் போய்விட்டார்கள். பொதுசன எழுச்சிகளிலே பதிஞயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் சிறைப்பட்டிருக்கிறார்கள். அங்கே சோவியற் என்கிற கூட்டக்காரர் மாத்திரம் குசாலாய்ச் சீவிக்கிறார்கள். சமதர்மம் பேசிக்கொள்ளுகிற ருஷியாவிலே ஆளுவோரும் அடிமைப்படுவோரும் இல்லேயா? அங்கேதான், நாட்டவர்கள் எல்லாம் காணிபூமி இல்லாமல், முதல் இல்லாமல், பிற்கால சீவியத்துக்கு வழி இல்லாமல், வாய்விடாச் சாதிகளேப்போல, ஆதரவற்ற அடிமைகளேப் போல நடத்தப்படுகிறார்கள். அங்கேதான், கொடுங்கோல் மன்னனிலும் கேடான சிலர், தங்களுடைய கூட்டங்களோடு சனங்களேக் கட்டியாண்டு, நெருக்

கிடை பண்ணிக்கொண்டு வருகிறார்கள். மருந்தின் தன்மை குடித்துப்பார்த்தாற்றான் தெரியும். சமதர்மத்தின் தன்மையை அதைக் கைக்கொண்டு வந்திருக்கிற ருஷ்யாவிலே கண்டுகொள்ளலாம்.

சீஷன் :— உலகம் சமமல்ல, பலவிதம் என்று சுவாமியார் நல்ல தெளிவாகக் காட்டினீர்கள். ஆணும் பெண்ணும், மூப்பும் இளமையும், புத்திக் கூர்மையும் புத்தி மழுக்கமும், சரீர பெலனும் பெலவீனமும், சுறுசுறுப்பும் மந்தமும், வழிகாட்டுவோரும் பின்பற்றுவோரும், அதிகாரமும் கீழ்ப்படிவும், ஆளுவோரும் சாதாரண சனங்களும், காவற்காரரும் காவல்பண்ணப் படுவோரும்—என்ற எத்தனையோ வகையான வித்தியாசம் உலகத்தில் உண்டு; இருக்கவேணும்; ஒருக்காலும் இல்லாமற் போகமாட்டாது. பொருள் பண்டமும், அவரவர் கெட்டித்தனத்தினாலும் அதிட்டத்தினாலும் வந்து கூடுகிறது என்றீர்களே, அதுவும் மெய்தான். ஆனாலும், உலகத்திலே, விசேஷமாய் இந்தக் காலத்திலே, பெரும் முதற்காரர் தொழிலாளருக்குத் தக்க சம்பளம் கொடாமல், தாங்களே வருமானத்திற் பெரும்பங்கைப் பொதுக்கிக்கொள்ளுகிறது இல்லையா? கூடுதலான மணிநேரம் வேலை செய்வித்துக்கொண்டு, அற்ப சம்பளம் கொடுக்கிறது இல்லையா? இதனாலே தான் முதற்காரர் இருக்கப்படாது, எல்லாம் பொதுவுடைமை ஆகவேணும் என்று சமதர்மக்காரர் வாதாடுகிறார்கள். சகல முதற்காரரையும் தள்ளுவதானால், பெரிய முதற்காரரான அரசாட்சியாரும் இருக்கப் படாது என்றது அவர்களுடைய கொள்கைக்கு நியாயமான ஒரு முடிவு. இதற்குச் சுவாமியாருடைய உத்தாரம் காத்திருக்கிறேன்.

குரு:—உலகத்திலே, விசேஷமாய் இந்நாட்களில், பொருளாதாரக் கணக்கிலே வெகு அநீதிகள் நடக்கிறது

என்பதிற் சந்தேகமில்லை. விரைவாயும் சூழ்ச்சமாயும் கைத்தொழில்களைச் செய்துமுடிக்கிற யந்திரங்கள் இக் காலம் அதிகமாய் ஏற்பட்டிருக்கிறது. அதினால், முதல் போட்டு வேலை செய்விக்கிறவர்களுக்கு அதிக லாபம் வர வழி உண்டு. இப்படிப்பட்டவர்கள், தங்கள் ஆதாயத்தை மேலும் பெருக்குவதற்காக, தங்கள் இயந்திரசாலை களிலே உள்ள தொழிலாளிகளைக் கொண்டு அதிகநேரம் வேலை செய்விக்கவும், சம்பளத்தைக் குறைத்துப் பிடித் துக்கொள்ளவும் ஏவப்படுகிறார்கள். இது தகாத ஒரு செய்கை என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இவர் களைத் திருத்துவதற்குப் பல வழிவகைகள் உண்டு. அங் கங்கே அரசாட்சியார் மூலமாக, வியாபார சங்கத்தவர் கள் மூலமாக, தொழிலாளிகள் கூட்டங்கள் மூலமாக இவ்வித முதற்காரருடைய கொடுமையை அடக்கி வரு கிறார்கள். நீதியான, வலோத்காரம் இல்லாத, கூலிக் குழப்பமும் வேலை நேரத்தையோ கூலியையோ நயமாக் கிக்கொள்ளுவதற்கு ஒரு வழியாகப் பாவிக்கப்படுகிறது. எப்படியோ, தொழிலாளிகள் முதற்காரரோடு நீதிக்குப் பங்கமில்லாமல் வாதாடி வழக்கிட்டுத் தங்கள் நிலைபாரத் தை மேலாக்கிக் கொள்ளுவதுதான் சரி. அதை விட் டிட்டு, துண்டாக முதற்காரரே வேண்டாம்; சகலத்தை யும் சீர்ப்படுத்தி ஆளுகிற அரசாட்சி வேண்டாம்; எல்லாம் ஒரு மட்டமாய் வரவேணும், தரை மட்டமாய் வர வேணும் என்று சத்தம் போடுவதும், கலகம் எழுப்பு வதும் பெரிய அடாத்து: நன்மையை அல்ல, பெரும் தின்மையையே கொண்டு வருகிற ஒரு நடவடிக்கை. இவைகளில் எல்லாம் முதற்காரரும் தொழிலாளிகளும் சத்தியவேதத்தின் போதகங்களுக்குச் செவி கொடுப் பார்களானால், எவ்வளவோ சீராய்ச் சிறப்பாய் சமாதான மாய் வாழலாம். முதற்காரருக்கும் பேராசை ஆகாது; தொழிற்காரருக்கும் அளவுக்கு மிஞ்சிய பொருட்பற்று ஆகாது. சத்தியவேதம் போதிக்கிற பிறர்சினேகம் என்ற புண்ணியத்தை இரு பகுதியாரும் சரியாய் அநுசரித்

தால், எவ்வித முறைப் பாட்டுக்கும் இடம் இராது. அல்லாமலும், இவ்வுலகம் நமது கதியல்ல; இது ஓர் பரீட்சைத்தலம்; சோதனை கொடுக்கிற பள்ளிக்கூடம்; மறுலோகத்திலேதான் நாம் மெய்யான மனத்திருத்தி அடையலாம் என்றதை எல்லாரும் நினைந்துகொள்ள வேண்டும். இங்கே

முற்றிலும் பசியால் வருந்துவோர் உணவுதனை
முன்னமே தேடி அலைவார்;
மூன்று காலமும் உணவருந்த வழியுள்ளோர்
முயன்று ஆடை நகை தேடுவார்;
சொற்ற துகில் நகை வகைகள் உள்ளவர்கள் விளைபூமி
சோலை சாலைகள் தேடுவார்;
தொகுத்திவை நிறைந்தவர் வகுத்த ஆள் அடிமை
யொடு சூழ்குடிமை தேடுவர்; இவை
பெற்றவர்கள் உத்தியோகம் பெறற்கெண்ணுவார்;
பெறில் அரசர் நிலை தேடுவார்;
பீடுபெறும் அரசனாயின் பிறரின் அரசைப்
பிடிக்க யோசித்து நிற்பார்;
குற்றமுறு மாந்தர்கள் திருத்தி எந்நிலையிலும்
கொள்ளார்கள் உண்மை இதுவே
குறைவற்ற அச்சுநகர் உறைவுற்ற சன்மார்க்க
கூட்டமுறு பெரியோர்களே

என்று "சன்மார்க்க சதகம்" சொல்லுகிறபடி, நல்ல மனம் இல்லாதவர்களுக்கு மனத்திருத்தி ஒருபோதும் வாராது. பசியால் வாடுகிறவன் தனக்கு ஒரு நேர உணவு கிடைத்தவுடன், இனி, மூன்று நேரச் சாப்பாடும் தேடுவான்; போதிய உணவு உள்ளவன் விதம் விதமான உடுப்புக்கும் நகைக்கும் ஆசைப்படுவான்; அப்பால், இனி, காணி பூமி வீடுவாசல் வேணும்; அதுவுமிருந்தால், ஆள் அடிமை குடிமைக்கு அழுவான்; பிறகு உத்தியோகத்துக்கு ஓடித்திரிவான்; அதுவும் கிடைத்தால், அரச பதவியை நாடுவான்; அரசனாகிவிட்டால்,

பிற அரசரைப் பிடித்துப் பூமியைக் கட்டியாள வகை பார்ப்பான். இப்படியே, இன்றைக்குத் தொழிலாளிகளாய் இருக்கிறவர்கள், நாளைக்கு முதற்காரராய் வர ஆசைப்படாமல் விடார்கள். சமதர்மக்காரர் தலைகீழாய் நின்றாலும், மனுஷ சுபாவத்தை மாற்றிப்போடுவார்களா? இவர்கள் முதற்காரரைக் கொள்ளையடித்தால், பிறகு கொள்ளைக்காரருக்குள்ளே தானே கலகம் பிறந்து, வேறு சின்னமுதற்காரர், பெரிய முதற்காரர் ஏற்படுவார்கள். நிலைப்பட்ட அரசாட்சியை விழுத்தாட்டினால், பிறகு அதை விழுத்தாட்டினவர்களுக்குள்ளே தானே வேறொரு வகையான அநியாயமான கொடுங்கோல் அரசுநடக்கும். சமதர்மக்காரருடைய தப்பறையைப் போலத் தலைதடுமாற்றமான தப்பறை இல்லை.

**சீஷன்**:— யோசனைபண்ணிப் பார்த்தால் குருவானவர் சொல்லியது முழுதும் உண்மை. தொழிலாளிகள் நியாயமான சம்பளம் பெற்றுக்கொள்ளுகிறதற்கும், தங்கள் நிலைபரத்தை மேற்படுத்துகிறதற்கும் ஏற்ற நல்ல நல்ல வழிபாடுகள் உண்டு. பொதுவுடைமைக் கொள்ளைக்காரருடைய கொள்ளை "உள்ளதையுங் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்" என்றதுபோல, தொழிலாளிகளுக்குக் கஷ்டத்தின்மேற் கஷ்டத்தைத் தான் வருவிக்கும். இது பட்டப்பகலைப்போல வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. அப்படியிருக்க, சமதர்மக்காரர், புத்திக்கு இவ்வளவு மாறான ஒரு கொள்கையைப் போதித்துக்கொண்டு வருவது எப்படி? படித்தவர்கள், நல்ல யுத்தி புத்தியுள்ளவர்களிலும் சிலர், அங்கங்கே, இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுவதற்கு நியாயம் என்ன? இதன் விபரத்தைச் சத்தியவேதக் குருவானவராகிய தாங்கள் ஒருக்கால் விளக்கமாய்ச் சொல்லவேணும்.

குரு:—சமதர்மக்காரர்களுடைய அடாமிடாங்கான எண்ணங்களுக்கு அடிப்படையான இரண்டு பெருந் தப்பறைகள் உண்டு. அதாவது

பூவுலகிலே பிறரை வஞ்சித்து அவாவுடன்
பொய்சொன்ன வாயும் அழியும்;
புத்தியில்லாமலே களவு செய் கரமொடு
புசித்தவாய் தானும் அழியும்;
பாவமொடு பிறர்பொருள்கள் பிறர்தாரம் இச்சையொடு
பார்த்திட்ட கண்கள் அழியும்;
பங்கமொடு அகங்காரமாகவே பிறரைப்
பழித்திட்ட நாவும் அழியும்;
தேவனைக் கண்டதார் மோட்ச நரகங்களைத்
தெரிசித்ததார் என்றிடும்
செருக்குற்ற யோசனைகள் செய்திட இடந்தரும்
திடமூளை தானும் அழியும்;
சோவான தேவ தீர்வைக்குள் ஆம் ஆத்துமம்
குறுக்குற்று அழிந்திடாதே

என்ற உண்மையை அவர்கள் முரட்டுத்தனமாய் மறுப்பார்கள். ஆத்துமமும் இல்லை கடவுளும் இல்லை என்றது அவர்களுடைய அபத்தமான கொள்கை. உலகத்திலே மண்ணாங்கட்டி போன்ற சடப்பொருட்கள் ஒழிய, புத்தி அறிவுள்ள சித்துப்பொருள் இல்லை என்பார்கள். சடமான பொருள் ஏதோ ஒருவகையாய் இயங்கி இயங்கி, மரம் செடி ஆடு மாடு மனிதர் முதலாக மாறி மாறி, ஏற்றம் பெற்றுக்கொண்டு வருகிறதாம். நான் காலால் மிதிக்கிற மண்தான், அதி சூழ்ச்சமான புத்தியும் அளவுக்கடங்காத ஆசைகொண்ட சித்தமும் உள்ள எனது ஆத்துமமாய் வந்ததாம். உலகத்திலே காணப்படுகிற சாரசாரங்கள் எல்லாம் ஒரு பென்னம்பெரிய இயந்திரத்திலே அமைத்திருக்கிற பற்சில்லுக்கள் போலவாம். பற்சில்லுக்கள் உருண்டு உருண்டு இயந்திரம் இயங்குவதுபோல உலகமும் நடைபெறுகிறதாம். அந்தச் சில்லுக்கள் நன்றாக உருண்டு மனுஷனை மேற்பதவிக்குக் கொண்டுவந்து விடுகிறதற்கு மனுஷன் உதவி செய்ய வேண்டுமாம். மனுஷனுக்கு மோட்சம் இந்தப் பூலோகத்திலே அல்லாமல் மறுலோகத்திலே இல்லை

யாம். இவர்கள் சொல்லுகிறபடி, இயக்கம் இல்லாத சகதிதான் புத்தியை உண்டாக்கினதென்ருல், "ஒன்றும் இல்லாத பிச்சைக்காரன் கோடி வராகன்களைத் தானஞ் செய்தான்" என்ற கதை போல வருமே. மலடி மகன் முயற்கொம்பு கொண்டுவந்ததுபோல வருமே. மலடிக்கு மகன் எது? முயலுக்கு கொம்பு எது? மண்ணுங்கட்டிக்குப் புத்தி எது? வெறும் மண்ணும் சகதியும் உலகமாய் வந்ததென்று அபத்தம் பேசுகிறவர்கள் கடவுளை ஏன் தேடுவார்கள்! "மலையை விழுங்கிய அம்மையாருக்கு மண்ணுங்கட்டி பச்சடி" தானே. ஆனதினல், "பட்டப்பகலை இரவென்று கூறுகிற இந்தப் பாதகர்கள்" கடவுள் என்று ஒரு பரம வஸ்து இல்லை என்று பயித்தியகாரரைப்போல பிதற்றுவார்கள். இவ்வளவு பித்தலாட்டமான ஒரு கொள்கையை நம்புவதார்? அதற்கும் ஆட்கள் உண்டு. ஆர் என்ருல், மிருகங்களைப் போல, தின்கிறதையும் குடிக்கிறதையும் உடுக்கிறதையும் படுக்கிறதையும் மாத்திரம் கவனித்துக்கொண்டு, இவைகளிலே முழுப் புலனையும் செலுத்தி வருகிறவர்கள்தான். இவர்களுடைய மனதிலே மறுலோக நினைவுக்குத் தங்களை அறியாமலே இடம் இல்லாமற் போய்விடும். தற்கால நாகரிகத்தினல் வந்த கேடுகளில் மகா பெரிய கேடு இது. விஞ்ஞானம் என்கிற இயற்கைச் சாத்திரங்களிலே தற்காலத்தார் அதிகமாய் மனதைச் செலுத்தி வருகிறபடியால், மெய்ஞ்ஞானம் என்கிற தேவ அறிவு அவர்கள் நினைவிலே சுருங்கிச் சுருங்கி வந்துவிட்டது. இப்படிப்பட்ட கவலையற்ற ஆட்களிடத்திலேதான் சமதர்மக்காரருடைய தீய விதை நன்ருய் முளைத்துப் பலிக்கும். விசேஷமாய், ஐரோப்பாவின் சில தேசங்களிலே, ஆகப் படித்தவர்கள் சிலர், விஞ்ஞான அறிவிலே நன்ருய் முதிர்ந்து வேருென்றையும் நினையாமலிருக்கிறதினல், அவர்களுடைய மனம் ஒன்றிலேதான் கட்டுப்பட்டு நிற்க, அவர்களுடைய புத்தி அதற்குத்தான் சுணையுள்ளதும் மறுகாரியங்களிலே சுணையில்லாமல் மரத்துப்

போனதும் ஆகிவிட்டது. அவர்களே ஆத்துமம் இல்லை, கடவுள் இல்லை என்ற சமதர்மக் கொள்கையை முன் பின் யோசனை இல்லாமல் ஆதரித்து வருகிறார்கள். இதுதான் ஆலகால விஷம்போன்ற இந்தப் பயங்கரமான தப்பறை அங்கங்கே பரவிவருகிறதற்குக் காரணம்.

**சீஷன்** :—இக்காலத்திலே விஞ்ஞானம் என்று சொல்லப்படுகிற உலக சாஸ்திர அறிவு மேற்பட்டிருக் கிறபடியால், மெய்ஞ்ஞானம் என்கிற தேவ சாஸ்திர அறிவு சுருங்கிப்போனது என்று தேவரீர் சொல்லியது முழுதுஞ் சரி. கேட்டோர் நம்பக்கூடாத அவ்வளவு ஆச்சரியமான காரியங்களை எல்லாம், கடவுள் கொடுத்த அறிவினாலேதானே, மனுஷர் கண்டுபிடித்துச் செய்து கொண்டு வருகிறார்கள்! நூற்றுக்கணக்கான மைல்களைச் சில மணித்தியால நேரத்திலே தாண்டி உயரப்பறக்கிற ஆகாயரதங்களை உண்டாக்கியிருக்கிறார்கள்; உலகத்தின் ஒரு அந்தத்திலேயிருந்து மறு அந்தத்துக்குச் செய்தி களை அறிவிக்கிற கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்; ஒரு இடத்தில் நடக்கிற கூத்து சம்பாஷணை முதலியவைகளை உலக முழுதிலும் உள்ள வர்கள் கேட்கத்தக்க ஒலிபரப்பி என்ற கருவியைச் சமைத்திருக்கிறார்கள்; கேட்கிறது மாத்திரமோ, கண் ணாலே காணத்தக்க முறையையும் சூழ்ச்சித்திருக்கிறார் கள்; வைத்திய சாத்திரத்துக்கு உதவியாக எத்தனை யோ நூதனமான கருவிகளை நாளுக்குநாள் புதிது புதிதாகச் செய்துகொண்டு வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்லுகில், இக்காலத்து மனிதர், தங்களுடைய அறிவு வளர்ச்சியினாலும் ஆராய்ச்சிகளினாலும், இயற்கையி லுள்ள சக்திகளை எல்லாம் தங்களுக்கு அடிப்படுத்தி வேலைகொள்ளத்தக்கவர்களாய் வந்துவிட்டார்கள். இவர் கள், புதிது புதிதாக, ஆச்சரியமான முறைகளைக் கண்டு பிடித்து நடப்பிப்பதிலே கண்ணுங் கருத்துமாயிருக்கிற படியினால், கடவுளை மறந்துபோகிறார்கள் என்றது மெய்.

மறந்திருப்பதும் போதாமல், கடவுள் ஏது? வேதம் ஏது? விசுவாசம் ஏது? ஆத்துமம் ஏது? என்று சிலர் வாய் கூசாமற் கூவித்திரிகிறார்களே. இவர்களுடைய ஏற்பாடுதான் சமதர்மக் கிளர்ச்சிக்கு அடிப்படை என்று தாங்களும் சொல்லியிருக்கிறீர்களே. ஆனபடியால், மதி மறந்து கடவுள் இல்லை என்று பிதற்றுகிற இந்தப் பாவி மனுஷருக்கு நல்லறிவு புகட்டும்படியாக, கடவுள் உண்டு என்ற தட்டிப் பேசக்கூடாத உண்மைக்குச் சாட்சியாக சில நல்ல நியாயங்களைச் சொல்லித்தரவேணும்.

குரு:—“ நாய் நக்கிச் சமுத்திரம் வற்றாது ” என்றதுபோல, மெய்மறந்தவர்கள் சிலர் கடவுள் இல்லை என்கிறபடியால், என்றும் எல்லாத்துக்கும் காரணமாய் இருக்கிறவர் இல்லாமற் போய்விடுவாரா? கதை பேசுகிறவன், அதைக் கேட்டிருக்கிறவர்களைப்பார்த்து: நான் இங்கே இல்லை, கதையைக் கேளுங்கோ என்றால், எல்லாரும் குலுங்க நகையார்களா? பேசுகிற ஆள் இல்லாமல் பேச்சு வருவது எப்படி? உலகத்திலே நாம் கண்ணாலே காண்கிற, காதாலே கேட்கிற, கையாலே தடவியறிகிற எல்லாம், சகலத்தையும் படைத்தவர் ஒருவர் உண்டு என்று வெளிப்படையாய்க் காட்டுமே.

வீடொன்று தோன்றிடிற் சிட்டித்த ஆசாரி
மேதினியில் இலை என்பரோ?
விலைபெற்ற பொற்பணி காண்கில், அதை ஆக்கு
பொன் வினைஞன் இங்கிலை என்பரோ;
ஏடொன்று காணில் அதை எழுதிவைத்திடு மனுடன்
இவ்வுலகில் இலை என்பரோ?
இசை ஒன்று கேட்கில் அதை இனிமையாய்ப் பாடு
வோன் இலை என்று வாதிப்பரோ?
கூடொன்று காணில் அஃதியற்று புட்குலமதிக்
கோத்திரையில் இலை என்பரோ?
குவலயமொடாகாய நிலை பருதி மதி உடு
குறித்தாக்கியே நடத்தும்

கோடொன்றும் உயிர்களின் பதியொருவரில்லை எனக்
கூறிடுதல் மடமை அன்றோ?
குறைவற்ற அச்சுநகர் உறைவுற்ற சன்மார்க்க
கூட்டமுறு பெரியோர்களே

என்று "சன்மார்க்கசதக" நூல் செய்தவர் சொல்லுவதுபோல, வீட்டைப் பார்க்கிறவன் அதைக் கட்டின ஆசாரியை இல்லை என்று சொல்லான். பொன் நகையைப் பார்க்கும்போது அதைச் சித்திரமாய்ச் செய்த தட்டான் உணடென்று எல்லாருக்கும் விளங்கும். ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தால், அதை எழுதினவனும் அச்சடித்தவர்களும் இல்லாமல், அது தானாய் வந்திராது என்றது தெரியும். இனிமையான ஒரு பாட்டுக் காதில் விழுந்தால் அதை யாரோ பாடிக் கொண்டிருக்கிறான் என்று கண்கெட்ட குருடனும் சொல்லுவான். குருவிக் கூட்டைக் காண்கிறவர்கள் அதைக் கட்டின குருவி இல்லை என்று சொல்லார்கள். இப்படியிருக்க, இந்த உலகமாகிய வீட்டைக் கட்டி, அதற்குச் சூரிய சந்திர நட்சத்திரங்கள் என்னும் விளக்குகளை ஏற்றி, அதைக் கிரமமாய் நடத்திக் கொண்டுவருகிற ஒரு சர்வ அதிகாரி இல்லை என்று சொல்லுவது முதிர்ந்த பயித்தியம் ஆகும் அல்லவா? இன்னும்

மரமுதல் அசைதலாற் கால் உளதென மதிப்பார்; எங்கும்
பரவிய புகையாற் செந்தீ உளதெனப் பகர்வர்; சுற்றும்
விரவிய மணத்தால் பாங்கர் வீஉளதென்று தேர்வார்;
பரன் உளன் எனும் உண்மைக்கு பார் எலாம் சாற்றும்
[அன்றோ

என்றபடி, மரம் முதலியவைகள் அசைந்தால் காற்று உண்டு என்கிறோம். புகை எழுந்து பரவக் கண்டால், நெருப்பு உண்டு என்கிறோம். கமகமென்று நறுமணம் வீசினால், பூ அருகில் உண்டு என்கிறோம். இதுபோல, பூமியைத் தவறாமல் சுழன்றுவரப் பண்ணி, அதிலே மரங்கள், செடிகொடிகள், நீர்வாழும் உயிர்கள், ஊரும்

உயிர்கள், நடக்கும் உயிர்கள், பறக்கும் உயிர்கள் முதலிய சகல படைப்புக்களையும் கிரமமாயும் ஒழுங்கு பெறவும் வைத்து நடப்பித்துக்கொண்டுவருகிற எல்லாம் அறிந்த ஒருவர் உண்டு என்று சொல்லாமல் இருப்பது எப்படி ?

**சீஷன் :**—குருவே நமஸ்காரம் ! உலகம் முழுதும் அந்நாட்தொட்டு இந்நாள்மட்டும் சுயமாகவே கைக்கொண்டுவருகிற இந்த மறுக்கமுடியாத மகா உண்மையை இவ்வளவு துலக்கமாக எடுத்துப் போதித்ததற்காகத் தங்களுக்கு அநேக நமஸ்காரம் ! நானும் இதைப் பற்றி ஒரு கதை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒரு முறை கடவுள் இல்லை என்ற நிரீச்சுரவாதியான ஒரு மகா சாஸ்திரி, தெய்வபத்தி உள்ள ஒரு பிரபுவுடைய வீட்டுக்கு வேறு சிலரோடுகூட விருந்துக்குப் போயிருந்தாராம். விருந்தோ மெத்தச் சம்பிரமமாய் நடந்தது. அறுசுவையுமுள்ள ஆரதக்கறிகள், மீன் கறிகள், இறைச்சிக்கறிகள்—கேட்டாலும் வாயூறத்தக்க அவ்வளவு உருசிகரமாய்ச் சமைத்த போசன வகைகள் பரிமாறப் பட்டதாம். அவ்வேளை நிரீச்சுரவாதியான சாஸ்திரி மூக்குமுட்டச் சாப்பிட்டு மகா திருத்தியோடு வீட்டெசமானனை பிரபுவைப் பார்த்து முகமனுகச் சொல்லுவார் :— "என்ன நேர்த்தியான விருந்து ! எவ்வளவு நளபாகமான போசனம் ! எத்தனை விதம் விதமான, சுரசமான கறிகள் ! உமக்குச் சமையல் செய்கிற சுயம்பாகியைப்போலக் கெட்டிக்காரன் கிடையாது" என்றார். பிரபு சிரித்து : "என்ன ஐயா சொல்லுகிறீர் ! இந்த நானுவிதமான கறிசோறுகளை ஆக்கச் சுயம்பாகியை என்னத்துக்கு ? வாழைக்காய் கத்தரிக்காய் முதலியவைகளையும், மீன், கோழி முதலியவைகளையும் அடுக்களையிலே போட்டுவிட, எல்லாம் தானுகவே ருசிகரமான கறியாய் வந்துவிடுகிறது, இதற்குக் கோக்கியை ஏன் ? சமையற்காரனை ஏன் ?" என்றார். நிரீச்சுரவாதி திகைத்

துப்போய்: "பிரபூ பகிடி பண்ணுகிறீர்கள்; காய் கனிகளை அறுத்து, கோழியை வெட்டிச் சாக்கு முதலியவைகளை அந்தந்த அளவுக்குப் போட்டு, சரியாகக் கறிகூட்டி அடுப்பேற்றி, உப்புப் புளி பார்த்து இறக்க ஆள் இல்லாவிட்டால் உருசியான கறிவகைகள் வருகிறது எப்படி? ஒரு எள்ளுப் போலே உப்புப் புளி கூடினாலும் கறியை வாயில் வைக்க முடியாமல் வருமே" என்றார். அதற்குப் பிரபு: "நன்றாகச் சொன்னீர் ஐயா! இந்தப் பூலோகத்திலே ஒன்றுக்கொன்று மாறான எத்தனையோ காரியங்கள் உண்டு. சுடுகிற சூரியன் கொஞ்சம் கூடச் சுட்டுவிட்டால், உலகம் முழுதும் அழிந்துபோம். அலைமோதுகிற சமுத்திரம் அற்பவேளை கரைபுரண்டு வந்துவிட்டால், சனலோகம் பாழாய்ப்போம். சூரியனைச் சுற்றுகிற பூமி தனது பாதையிலே ஒரு அணுவளவு பிசகிப்போனால், எல்லாக் கிரகங்களும் நிலைதப்பி ஒன்றோடொன்று மோதிச் சின்னபின்னமாய்ப்போம். இவைகளை எல்லாம் அந்தந்தக் கணக்குக்கு அந்தந்த இடத்திலே அமைத்து வைத்து நடப்பிக்கிறதற்கு ஒரு கடவுள் வேண்டாம் என்றால், என்னுடைய அடுக்களைக்கும் கணக்குக்குக் காய்கறிகளை வெட்டிப்போட்டு உப்புப்புளிபார்த்துச் சமைக்கிற சுயம்பாகி வேண்டாம்" என்றார். கேட்டிருந்த விருந்தாளிகள் எல்லாம் கெக்கட்டமிட்டுச் சிரித்தார்கள். நிரீச்சுரவாதியான மகா சாஸ்திரியும் அன்றைக்கே நல்ல பாடம் படித்துக்கொண்டார். கடவுள் உண்டு என்றது கைமெய்யான ஒரு காரியம். ஆனாலும், சிலர் சொல்லுகிற மூட நியாயம் ஒன்று உண்டு. கடவுள் இருந்தால், நாம் அவரைக் காண வேண்டாமா? விஞ்ஞான சாஸ்திரிகள் தங்கள் கண்ணாற் காணாதது ஒன்றையும் விசுவசிக்கப்படாதாமே. இந்த முரட்டுக் கேள்விக்கும் தேவரீர் ஒரு தெளிவான விடை சொன்னால் நல்லது.

குரு :—கடவுளைக் காட்டச்சொல்லி நின்ற ஒரு நிரீச்சுரவாதியின் கதை தெரியுமா? இவன் ஒரு குருவானவரோடு தர்க்கமாடி: "கடவுளைக் காட்டும், நம்புகிறேன்" என மூர்க்கப்பிடியாய் நின்றான். அப்போது குருவானவர் அவன் முதுகிலே நல்ல உறைப்பான ஒரு அடிபோட்டார். நிரீச்சுரவாதி பதைபதைத்துக்கொண்டு உடனே கோட்டுக்கு ஓடிப்போய் தன்னைக் குருவானவர் அடித்தார் என்று பிராது செய்தான். கோட்டிலே குருவானவர் அவனைப் பார்த்து: "நான் உன்னை அடித்ததற்கு சாட்சிவிடு" என்றார். "என் முதுகில் இருக்கிற பச்சைப்புண்ணும் நோகிற நோவுதான் போதிய சாட்சி" என்றான் நிரீச்சுரவாதி. "நல்லது, நோவைக்காட்டு ஒத்துக்கொள்ளுகிறேன்" என்றார் குருவானவர். அதற்கு அவன், "என் சரீரத்திலே நான் படுகிற நோவை உமது கண்ணுக்குக் காட்டுகிறது எப்படி?" என்றான். குருவானவர் அதற்கு மறுமொழியாக: "கண்காணாத நோவு உனக்கு இருக்கிறது என்றால், கண்காணாத கடவுளும் எனக்கு உண்டு. இதைக் காட்டத்தான் உனக்கு அடித்தேன்" என்றார். நோவைக் கண்ணாலே காணமுடியாது; சரீரத்திலே உணரவேணும். அதுபோலவே, வாசனையை மூக்கு அறியவேணும். வாய் அறியாது; செவி அறியாது; கண்கள் அறியாது; சரீரம் அறியாது. பேசுவதற்கு வாய் உண்டு. கண் பேசாது. கேட்கிறதற்குக் காது உண்டு. வாய் கேளாது. ஒரு புலனுக்குத் தோற்றுவது மற்றொரு புலனுக்குத் தோற்றாது. இப்படியே மனதுக்கு விஷயமான ஞானகாரியங்களைச் சரீரத்தின் பஞ்சபுலன்களாலே அறியத் தேடுவதும் மூடத்தனம். இதைத்தான் நீதிநூலிலே

வாசம் மூக்கறியும் அன்றி வாய், செவி, விழி மெய் தோரா;
பேச வாய் அறியும் அன்றி, பின்னை ஓர் புலன் தோராது;
நேசம் ஆர் தொண்டர் ஞான நேத்திரங் கொண்டு காணும்
ஈசனை முகத்தின்கண்ணால் இகத்தியார் காணவல்லார்?

என்று சொல்லியிருக்கிறது. எல்லாத்தையும் கண்ணுலே காணவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் காதையும் வாயையும் மூக்கையும் அடைத்துச் சரீர உணர்ச்சியையும் மரத்துப்போகப் பண்ணிக்கொள்ளுவது அல்லவோ கெட்டித்தனம்! இவர்களுக்கு

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்

என்ற உண்மை தெரியாது. "கண்ணுலே கண்டதும் பொய், காதாலே கேட்டதும் பொய், விசாரித்தறிந்தது மெய்" என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்படவில்லையா? எத்தனையோ முறை நமது கண் நம்மை ஏமாற்றிப்போடுகிறது. மாலைநேரம் தூரத்திலே மரக்கட்டையைக் கண்டு, ஆள் என்று எண்ணிக்கொள்ளுகிறோம். நீலத்தைக் கண்டு கறுப்பு என்று மயங்கிப் போகிறோம். கிழக்கே இருந்து உண்டாகிற சத்தத்தை மேற்கே உண்டாகிறது என்று எண்ணிக்கொள்ளுகிறோம். ஒருவர் குரலை வேறொருவருடையது என்று ஏமாந்துபோகிறோம். மனதினுலே சீர்தூக்கி, இன்னது இப்படி என்று துணிகிறதுதான் உண்மை. இப்படியே கண்ணுலே காணாத எத்தனையோ காரியங்களை மனதாலே ஆராய்ந்து அற்ப சந்தேகமும் இல்லாமல் நல்ல முடிவுகட்டலாம்.

பூதம் யாவுக்கும் மேலாய்ப் பொருந்திய விசும்பை, காற்றை
வேதநூலதனை, மண்ணோர் மெய்உறை உயிரை, நெஞ்சை,
ஏதமில் அறத்தை, கண்ணுற் பார்த்திலோம் எனினும் உண்டென்று
ஓதல்போல் தெய்வந்தான் ஒன்று உளதெனல் தேற்றம் அம்மா

என்றபடி, மரந்தடிகள் அசைகிறதைக்கொண்டு, காற்று வீசுவதை அறிகிறோம். பற்பல உண்மைச் சாட்சிகளின் மூலமாய், வேதநூலை அங்கிகரிக்கிறோம். மூச்சு

இழுத்து விடுகிறது முதலானவைகளால், உயிருள்ள சரீரத்திலே ஆத்துமம் இருக்கிறதை நிச்சயப்படுத்துகிறோம். நன்மை தின்மை அறிவதைக்கொண்டு, மனச்சாட்சி உண்டு என்று முடிவுகட்டுகிறோம். பாவ புண்ணியத்தையும் மனதாலே பகுத்தறிகிறோம். இவைகள் ஒன்றையும் கண்ணாலே காணாவிட்டாலும், மனதாலே ஆராய்ந்து உண்மை என்று சந்தேகம் இல்லாமற் தெளிந்துகொள்ளுகிறோம். இப்படியே நம்மைப் படைத்து நடப்பித்துவருகிற கடவுள் என்கிற பராபர வஸ்து உண்டென்று, சற்றேனும் ஐயப்பாடு இல்லாமல், ஆராய்ச்சியால் அறிந்துகொள்ளலாம்.

எல்லாத்தையும் சிருட்டித்த இந்தப் பராபர வஸ்துவை, சகல நன்மைச்சுரூபியான இந்தப் பேருபகாரியை, தயாளசமுத்திரமாகிய இந்தப் பரம பிதாவை நாம் தியானித்து வழிபட்டு, ஒருநாள் நம்மிடத்திற் கணக்குக் கேட்கப்போகிற இவருடைய திருச்சித்தத்துக்கு அடங்கி நடப்பது நமக்குக் குன்றாத கடமை. பல பல இடைக்காரணங்களினால் உலகத்திலே உயர்வும் தாழ்வும் ஏற்பட்டிருக்கிறது. உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்களை ஒடுக்கி நடத்தாமல், அவர்களிடத்திலே சருவேசுரனுடைய சாயலைக் கண்டு, தங்களைப்போல அவர்களை நேசிக்கவேண்டியது. தங்களுக்கு வாய்த்திருக்கிற மேல் நிலைபரத்தைப்பற்றி இறுமாப்புக் கொள்ளல் ஆகாது. செல்வர்கள், வறியவர்களுடைய அவசியங்களில் அன்போடு உதவி செய்யவேண்டியது. அறிவாளிகள், அறிவு குறைந்தவர்களுக்கு நற்புத்தி போதிக்கவேண்டியது. இனி, தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களைப்பற்றி எரிச்சல் புகைச்சல் கொள்ளாமல், அவர்களோடு அடாத்தாக நெருங்கிக் கொள்ளாமல், நீதியும் நேர்மையுமான வழிவகைகளால் தங்கள் நிலைபரத்தை நன்மைப்படுத்திக்கொள்ள முயற்சிபண்ண வேண்டியது. உயர்ந்த நிலைபரந்தான் நல்லது, தாழ்ந்த நிலைபரம் ஆகாது

என்று எண்ணுவது தவறு. செல்வம்தான் பாக்கியம், வறுமை நிர்ப்பாக்கியம் என்று நினைக்கப்படாது. திவ்விய மீட்பரானவர் வறுமையே பாக்கியம் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். எந்த நிலைபரத்தில் இருந்தும் சருவேசுரனுக்கு உவப்பாக நடந்து மோட்ச பேரின்பத்தை அடைந்துகொள்ளலாம். இவ்வுலகம் ஒரு பரீட்சைத்தலம் என்றேன். இது ஒரு பெண்ணம் பெரிய கூத்துக்களரி என்றும் சொல்லலாம். கூத்திலே இராச வேஷமும் வேணும்; மந்திரி வேஷம், சேவகர் வேஷம், குடியானவர்கள் வேஷமும் வேணும்; பறை வேஷமும் வேணும். பறை வேஷம் போட்டவன் பறைக்கூத்தைத் திறமாய் ஆடி விட்டால் இராச வேஷத்தையும் வென்று போடுவான். வேஷத்தில் ஒன்றும் இல்லை. ஆட்டத்திலேதான், பேர் எடுக்கிறதும் கோசுபோகிறதும் அடங்கியிருக்கிறது. அதுபோலவே, வறியவர்கள் சிறியவர்களாய் இருப்பவர்களும், தங்கள் வேஷத்தை நல்லாய் ஆடினால், பேர் எடுக்கலாம். அதாவது, இவர்கள் கடவுளுடைய கற்பனைகளுக்கு ஏற்க நடந்து, பிறர் சிநேகம் தேவ சிநேகங்களோடு நாட்போக்கி வந்தால், மோட்ச பாக்கியத்தை அடையலாம். இந்த உலக சீவியம் முழுதும் ஒற்றை இராக் கூத்துத்தான் என்று சொல்லலாம். விடியும்பொழுதே பேர் எடுத்தவர்களையும் எடாதவர்களையும் தெரியும். ஆனபடியால் நம்முடைய சீவிய காலத்தின் வேஷத்தை உலகம் என்கிற களரியிலே திறமாய் ஆடி, மரணம் என்னும் திரை விழுகிறபோது நித்திய பேரின்ப சம்பாவனையை அடைந்துகொள்ளக்கடவோம்.

சுபம்! சுபம்!!

Printed by B. Santhiagoepillai 454-38

St. Joseph's Catholic Press,
Jaffna, 454-38.